பக்கங்கள்:-20

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 15 | வியாழக்கிழமை | 27.02.2025 | அதிர்வு 207

கத்திக்குத்துத் தாக்குதலில்

## கிராண்ட்பாஸில் ஒருவர் கொலை!

### இருவர் படுகாயம்



கொழும்பு, கிராண்ட் பாஸ் பகுதியில் நேற்று இடம்பெற்ற 06

## வடக்கு, கிழக்கில் பணிபுரியும் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு 'தீவிரவாதி' முத்திரை

### ஐ.நா. விசேட அறிக்கையாளர் மேரி லோலர் விசனம்

இலங்கையில் மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தொடர் வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக்கு உள்ளாகின்றனர் எனவும், தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர் எனவும் மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் மேரி லோலரின் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடரின் இரண்டாம் நாள் அமர்வில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கை 06



## ஆட்சி செய்ய முடியாவிடின் மீண்டும் நாட்டை ரணிலிடம் ஒப்படையுங்கள்

### அநுரவிடம் மொட்டுக் கட்சி வேண்டுகோள்



**"அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினருக்கு அனுபவம் இல்லை என நாம் தேர்தலுக்கு முன்னரே கூறினோம். தற்போது மக்கள் அதனை நடைமுறையில் காண்கின்றனர். தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி முறையாக ஆட்சி செய்ய முடியாவிட்டால் மீண்டும் நாட்டை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்துச் செல்லுங்கள் என்று அநுர அரசிடம் கேட்டுக் கொள்கின்றோம்."**

**- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.** 06

கம்பஹாவில் நேற்று

## ரி - 56 ரக துப்பாக்கியும் தோட்டாக்களும் மீட்பு!



கம்பஹாவில் துப்பாக்கியும், தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கம்பஹாவின் யகோடமுல்லவில் உள்ள மஹேன பொது மயானத்தில் இவை கண்டு 06

## செவ்வந்தியின் தாயாரும் சகோதரனும் மார்ச் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில்

பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களில் ஒருவரான கனேமுல்ல சஞ்சீவ சுட்டுப் படுகொலை செய்யப்பட்டசம்பவம்தொடர்பில்தேடப்படும்பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தியின் தாய் மற்றும் சகோதரனை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொலையொன்று 06



06




லஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தும் ஆணைக்குழுவின் இயக்குநர் நாயகமாக மேல் நீதிமன்ற நீதிபதி ரங்க சிறிநாத் அபேவிக்ரம திஸநாயக்க நியமிக்கப்பட்டமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றமை குறித்து இரண்டு தினங்களுக்கு முன்னர் என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அதில் ஒரு சிறிய தகவல் தவறு உள்ளது. அதனைத் திருத்திக் கொண்டு, மேலதிக விவரங்களை இன்று தரலாம் என்று நினைக்கிறேன்.

இந்த வழக்குகளை அரசமைப்புக் கவுன்ஸிலில் அங்கத்துவம் பெற்றுள்ள மூன்று சிவில் சமூக பிரதிநிதிகளும் தாக்கல் செய்திருக்கின்றனர் என்று நான் குறிப்பிட்டு இருந்தேன். அது தவறு. அவர்களையும் எதிராளிகளாக குறிப்பிட்டு, வேறு பிரஜைகள் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு முக்கியமான 06

# கற்பிட்டியில் மின்னல் தாக்கி மீனவர் ஒருவர் பரிதாபச் சாவு



புத்தளம் மாவட்டம், கற்பிட்டி – கண்டக்குளி கடற்பரப்பில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்ட மூவரின் மீது மின்னல் தாக்கி ஒருவர் கடலில் வீழ்ந்து உயிரிழந்துள்ளதுடன் மற்றைய இருவரும் மயங்கிய நிலையில் படகுகளுடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

கடலில் வீழ்ந்தவரின் சடலம் இதுவரை மீட்கப்படவில்லை. சடலத்தைத் தேடும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

உயிர் தப்பிய இருவரும் 28 மற்றும் 46 வயதுடையவர்கள்.

மேற்படி இருவரிடமும் கற்பிட்டி பொலிஸார் மற்றும் புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொழும்பைச் சேர்ந்த நபர் கம்பஹாவில் சடலமாக மீட்பு

கம்பஹா மாவட்டம், கிரிந்திவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெத்தேகம பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றின் அறையிலிருந்து ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று கிரிந்திவெல பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு 15 பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய நபரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் குறித்த விற்பனை நிலையத்தில் தனியாக வசித்து வந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் பூகொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிந்திவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல்கள் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும்: தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க



"உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளின் செயற்பாடுகள் என்னவென்பது தொடர்பில் தெளிவற்றத்தன்மை காணப்படுகிறது. நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தேர்தல்கள் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும்."- இவ்வாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசமைப்பின் பிரகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகவே தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.தேர்தலை நடத்தும் திகதி அனைவருக்கும் சாதகமான வகையில் அமையும்.

உள்ளூராட்சிமன்றங்களின் செயற்பாடுகள் என்ன, தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் வகிபாகம் என்பது தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.ஆகவே இவ்விடயம் குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

உள்ளூராட்சிமன்றங்களை பொறுத்தவரையில் அதிகார ரீதியிலான சிக்கல்நிலை காணப்படுகிறது. ஆகவே எதிர்வரும் காலப்பகுதிகளில் நடைமுறைக்கு சாத்தியமான வகையில் தேர்தல்கள் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

தேர்தல் முறைமை மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்.அதற்கமைவாக அரசியல் தரப்பினர்கள் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்." என்றார்.




# இலங்கை எரிபொருள் சந்தையில் நுழைந்தது அமெரிக்க நிறுவனம்

அமெரிக்காவுக்குச் சொந்தமான சுஆ பார்க்ஸ்,ஷெல் நிறுவனம் இலங்கையில் முதலாவது எரிபொருள் நிலையத்தை அம்பத்தலை பகுதியில் நேற்று திறந்து வைத்தது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட இந்த நிறுவனம் இலங்கையில் எரிபொருள் நிலையத்தைத் திறந்துள்ளமை பெருமையளிப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தமது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு இந்த நிறுவனமும் பங்களிப்பு வழங்கும் என ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனவரி மாதத்தில் ஏற்றுமதி மூலம் 1.3 பில்லியன் டொலர் வருமானம்



இந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு 1.3 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜனவரி மாதம் பொருள் ஏற்றுமதி வருமானமானது 3.51 சதவீத வளர்ச்சியாகவும், விவசாய ஏற்றுமதி வருமானமானது 14.87 சதவீத வளர்ச்சியாகவும் பதிவாகியுள்ளது.

இதற்கமைய, இந்த வருடத்தின் முதலாம் மாதத்தில் பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட மொத்த ஏற்றுமதி வருமானம் 1334.19 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவானதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.



# அரசியல் பழிவாங்கல்களைக் கைவிட்டு உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடியுங்கள்: நாமல் ராஜபக்ஷ

அனைத்து ஊழல்களையும் ராஜபக் ஷர்கள் மீது சுமத்துவதால் உண்மையான குற்றவாளிகள் ஒழிந்து கொள்வார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரசாங்கம் மேற்கொள்ளும் அரசியல் பழிவாங்கல்களை நிறுத்தி விட்டு உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

எயார் பஸ் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,“எயார் பஸ் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரிப்பதற்கு இன்று வருகை தருமாறு கூறியிருந்தார்கள். அதனால் நான் இன்று வந்தேன். அவர்கள் கூறிய நேரத்திற்கே வந்து விட்டேன். இன்று ஒரு விடுமுறைநாள். விடுமுறைநாளிலும் வருகை தந்து விசாரணை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்றோம். வழமையைப் போல 100 மில்லியன் ரூபாயை மேசைமீது வைத்து விட்டுச் சென்றுள்ளதாக இன்னும் ஒருவர் கூறியுள்ளார். கடந்த முறை 200 மில்லியன் ரூபாய். இம்முறை நூறாகக் குறைந்துள்ளது. அடுத்தடுத்த முறைப்பாட்டில் 50, 25 எனக் குறைந்து செல்லும்.

அரசாங்கம் எங்களைப் பற்றி விசாரிக்க சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, சமய விடுமுறை தினங்கள் என பாராது விடுமுறை நாட்களிலும் விசாரணைகளை மேற்கொள்வது போல நாட்டு மக்களுக்கு நாளாந்தம் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குங்கள். பாதீட்டில் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றுங்கள். தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை மறந்து விட்டார்கள். பாதீட்டில் வழங்கியவற்றையாவது நிறைவேற்ற இவ்வாறு அயராது உழைத்தால் நல்லது என நான் எண்ணுகின்றேன்.

இப்போது யார் வேண்டுமானாலும் எல்லா கள்ள வேலைகளையும் செய்து விட்டு ராஜபக்சர்கள் மீது சுமத்தி விட முடியும். இப்போது அது எல்லாருக்கும் மிக இலகுவான விடயமாகிப் போய்விட்டது. அதனால் அவர்கள் நிரபராதிகள் என விடுதலையாவார்கள். அரசாங்கமும் இதனை வழக்கமாக்கி விட்டால் நாட்டில் நடக்கும் எல்லா குற்றச்செயல்களும் எங்கள்மீது சுமத்திவிட்டு உண்மையான குற்றவாளிகள் ஒழிந்து கொள்வார்கள். அதனால் இந்த அரசியல் பழிவாங்கல்களைக் கைவிட்டு விடுங்கள் என நான் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றேன். உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடியுங்கள்.” என்றார்.

# தேசிய மகளிர் வாரம் மார்ச் 2 ஆரம்பமாகிறது




மார்ச் 2 ஆம் திகதியிலிருந்து 8 ஆம் திகதி வரை தேசிய மகளிர் வாரமாகப் பிரகடனப்படுத்தி, சர்வதேச மகளிர் தினத்தைத் தேசியக் கொண்டாட்டமாகத் தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான திட்டங்களைச் செயற்படுத்துவதற்காகப் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இம்முறை சர்வதேச மகளிர் தினம் “அனைத்துப் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்காக உரிமைகள், சமத்துவம், வலுப்படுத்தல்” எனும் தொனிப்பொருளில் கொண்டாடப்படுகின்றது.

அதற்கு இணையாக “மாதருக்கு நிலைபேறான எதிர்காலம் – மாதரின் வல்லமையே எமது வழிகாட்டி” எனும் தொனிப்பொருளில் மார்ச் 2 ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை தேசிய மகளிர் வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.





# கடற்படை உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி விசேட கலந்துரையாடல்!

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு தொடர்பில் கடற்படையின் உயர் அதிகாரிகளுடன், சிறப்பு கலந்துரையாடல் ஒன்று நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், இலங்கையின் பாதுகாப்பு நிலைமை தொடர்பிலான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த, கடல் பரப்பில் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள், கடல் மார்க்கமாக நடைபெறும் ஆயுத விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனை, சுற்றிவளைப்பு உள்ளிட்ட ஆழ்கடலில் மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு முன்னெடுப்புக்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்தா, கடற்படை தளபதி வயிஸ் அட்மிரல் கஞ்சன பானகொட உள்ளிட்ட கடற்படையின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தொடுக்கப்பட்டுள்ளது. அவை கவனிக்கத்தக்கவை.

ஒன்று – இந்தப் பதவி, அதாவது லஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவின் இயக்குநர் நாயகம் பதவி, ஒரு வகையில் நிறைவேற்ற அதிகாரப் பிரயோகம் தொடர்பானது. நீதித்துறையில் – நீதிச் சேவை ஆணைக்குழுவின் கீழ், நீதிபதி பதவியில் இருப்பவர் ஒருவர், மேற்படி பதவியை ஏற்பதற்காக இடையில் நீதிபதிப் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டு, அந்தப் பதவியை – லஞ்ச, ஊழல் முறைகேடுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவின் இயக்குநர் நாயகம் பதவியை – வகித்து விட்டு, பின்னர் மீண்டும் நீதிச் சேவை ஆணை குழுவுக்கு உட்பட்ட நீதித் துறைக்குத் திரும்புவது, நீதித்துறையின் சுயாதீனத்துக்கும் தனித்துவத்துக்கும் இழுக்கை ஏற்படுத்தும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. ஏற்கனவே இந்த விடயத்தை உயர் நீதிமன்றம் கவனத்தில் எடுத்து சில உத்தரவுகளை வழங்கி இருப்பது முக்கியமானதாகும்.

அடுத்தது – இந்த இயக்குநர் நாயகம் பதவியை வகிப்பவருக்கு வழக்குத் தொடுநர் (புரொஸிக்கியூஷன்) அனுபவம் அதிகம் வேண்டும். ஆனால் நேரடியாக நீதிபதி பதவிக்கு வந்தவர்கள் ஆரம்பத்தில் வழக்குத் தொடுநர் விவகாரத்தில் அனுபவம் இல்லாவிட்டால், அத்தகைய நீதிபதி பதவியில் இருந்து சென்று, மேற்படி இயக்குநர் நாயகம் பதவிக்கு நியமிக்கப்படுவது பொருத்தமற்றது என்ற நிலைப்பாடும் உயர் நீதிமன்றத்தினால் முன்னர் கவனத்தில் எடுக்கப்பட்ட விடயம் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

மூன்றாவது விவகாரம் – முக்கியமானது. மேற்படி பதவிக்கு நீதிபதி ரங்க சிறிநாத் அபேவிக்ரம திஸநாயக்கவும் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோனும் போட்டியிட்ட சமயம், அது தொடர்பான அரசமைப்பு கவுன்ஸிலில் பரிசீலனைகளின் போது தாங்கள் தவறாக வழிநடத்தப்பட்டனர் என்ற கருத்து நிலைப்பாடு அரசமைப்பு கவுன்ஸிலின் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கு இருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. அந்த அடிப்படையில் இந்த வழக்கில் வழகாளிகளின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் விதத்தில் எதிராளிகளான அரசமைப்பு கவுன்ஸிலின் சிவில் சமூக பிரதிநிதிகள் மூவரும் நிலைப்பாடு எடுப்பார்கள் என்றும் கூறப்படுகின்றது. அவர்கள் சார்பில் முன்னிலையாகும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தமது கட்சிக்காரர்கள் சார்பில் அத்தகைய நிலைப்பாட்டை எடுப்பார் என்றே தெரிகின்றது.

அரசமைப்புக் கவுன்ஸிலில் எதிர்க் கட்சிகள் தரப்பில் இடம்பெற்றுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் மேற்படி நியமனம் தொடர்பான வாக்கெடுப்பில் ஆளும் தரப்போடு சேர்ந்து வாக்களித்த காரணத்தால் நீதிபதி ரங்க சிறிநாத் அபேவிக்ரம திஸநாயக்க இந்த பதவிக்கு ஐந்துக்கு – நான்கு வாக்குகள் என்ற வித்தியாசத்தில் தேர்வானார் என்பது தெரிந்ததே.

இந்த வழக்கு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டால் இந்த விடயங்கள் விவரமாக நீதிமன்றத்தில் ஆராயப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விவகாரத்தையொட்டி இன்னொரு விடயமும் கவனிக்கப்பட வேண்டி உள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசராக இருந்த நிஸங்க பந்துல கரணாரத்ன நெருக்கடி நிலையை அடுத்து நேரத்துடன் ஓய்வில் சென்றமையால் அவரது இடத்துக்கு முகமத் தஹிர் லாவர் மேன்முறையீட்டு நீதிமன்றப் பதில் தலைமை நீதியரசராக நியமிக்கப்பட்டார். இந்த இரண்டு வார கால பதில் நியமனம் அடுத்த தடவையும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பதில் நியமனத்துக்கும் அதற்குப் பின்னரான பதவி நீடிப்பிற்கும் அரசமைப்பு கவுன்ஸில் அனுமதி வழங்கி இருக்கின்றது.

ஆனால் அந்த பதில் நியமனத்திற்கு நாட்டின் பிரதம நீதியரசர் பரிந்துரை வழங்கவில்லை என்று கூறப்படுகின்றது. அத்தகைய சூழ்நிலை நீடித்தால் பிரதம நீதியரசரின் பரிந்துரை பெற்ற வேறு ஒருவரை அப்பதவிக்கு நியமிப்பதே அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் அப்படியல்லாமல் முன்னவருக்கே தொடர்ந்து பதில் நீடிப்பு வழங்கும் முடிவை அரசமைப்பு கவுன்ஸில் அங்கீகரித்து உள்ளது. இப்படி அரசமைப்புக்கு கவுன்ஸில் முடிவெடுப்பதற்கு அந்த கவுன்ஸிலுக்கு எதிர்க் கட்சிகள் தரப்பிலிருந்து தெரிவாகியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதியான சிறிதரன் அரசமைப்பு கவுன்ஸிலின் ஆளும் தரப்பு பிரதிநிதிகளோடு சேர்ந்து ஒத்துழைத்து வாக்களிப்பது ஒரு காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டது.

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சார்பில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும் எனவும், நாட்டில் இடம்பெற்ற வன்முறைகள் குறித்து விசாரிப்பதற்கான ஆணை அந்தக் கட்டமைப்புக்கு வழங்கப்படும் எனவும் அறிவித்தார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் இலங்கை தொடர்பான வாய்மொழிமூல அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

அதேபோன்று உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டுவரும் ஒடுக்குமுறைகள் மற்றும் மீறல்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் மேரி லோலரின் அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன்படி இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் நிலை தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மேரி லோலர், மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணி புரியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் தொடர் வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக்கு உள்ளாகின்றனர் எனவும், தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பல பெண் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என முத்திரை குத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள அவர், அவர்கள் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுக்கும்போது தாக்குதலுக்கு உள்ளாகின்றனர் எனவும், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர் எனவும் விசனம் வெளியிட்டுள்ளார்.

## கிராண்ட்பாஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கத்திக்குத்துத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆட்சி செய்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"நாமல் ராஜபக்ஷ மாத்திரமின்றி சகல எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அவர்களுக்கு தமது நிலைப்பாட்டுக்கமைய சுதந்திரமாக செயற்படுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது. ஆளும் தரப்பு எவ்வாறான சதி செயல்களில் ஈடுபட்டாலும் நீதித்துறையின் மீது எமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

எதிர்க்கட்சிகளை முற்றாக இல்லாதொழித்து கம்யூனிச ஆட்சியை தோற்றுவிப்பதே இவர்களது நோக்கமாகும். கைது செய்யப்படும் சந்தேகநபர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழக்கின்றனர்.

இவை தொடர்பில் மக்கள் தெளிவு பெற வேண்டும். இவ்வாறு சந்தேக நபர்கள் உயிரிழப்பது சிறந்தது எனச் சிலர் எண்ணுகின்றனர். ஆனால், அது தவறாகும்.

நாட்டில் மரணதண்டனை கூட நிறைவேற்றப்படுவதில்லை. சிறைக்கைதிகளின் உரிமைகள் அரசமைப்பிலும் உள்வாங்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில் அவர்களைக் கொல்வதற்கு யாருக்கு என்ன உரிமையிருக்கின்றது? சட்டமா அதிபர் திணைக்களம் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்ற நிலையிலும், அதற்கு இணையாகப் பிறிதொரு சட்ட நிறுவனத்தை நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய பாதுகாப்பு குறித்து எமக்குக் கற்றுக்கொடுப்பதாகக் கூறியவர்களுக்கே தேசிய பாதுகாப்பு என்ன என்ற புரிதல் இல்லை. அதனால்தான் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பில்லை என்று கூறுகின்றனர். இந்த அழுத்தத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அவரது சாரதியைக் கழுதை எனத் திட்டினார்.

இவர்களுக்கு அனுபவம் இல்லை என்பதை நாம் தேர்தலுக்கு முன்னரே குறிப்பிட்டிருந்தோம். அதனைத் தற்போது மக்கள் நடைமுறையில் காண்கின்றனர். நாட்டை ஆட்சி செய்ய முடியாவிட்டால் மீண்டும் ரணிலிடம் ஒப்படைத்து விட்டுச் செல்லுங்கள் என்று அநுர அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றார்.

# யாழ். போதனா நிர்வாகத்துக்கு எதிராக வைத்தியர்கள் இன்று முதல் போராட்டம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்துக்கு எதிராக இன்று வியாழக்கிழமை முதல் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"நோயாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யத் தவறியமை மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகத்தைத் தக்க வைப்பதற்காக மருத்துவமனை ஊழியர்களிடையே தொடர்ந்தும் சர்ச்சைகளை உருவாக்கும் முயற்சிகளைத் தொடர்ச்சியாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மேற்கொண்டு வருவதை எதிர்த்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட நாம் தீர்மானித்துள்ளோம்.

நாங்கள் தொடர்ச்சியாக யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தோடு இரண்டு மாதங்களாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வந்த நிலையிலும் நோயாளர்களின் பாதுகாப்பை யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாகம் உறுதி செய்யத் தவறியமையால், தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பின்வரும் காரணங்களுக்காகவே நாம் எமது தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளோம்.

1. நோயாளர் அவசர சேவைகளுக்கான பிரிவுகளுக்கு ஆளணிப் பற்றாக்குறையாகவும் அதேநேரம், சாதாரண பிரிவுகளுக்கு அதிகமான ஆளணியும் பொருத்தப்பாடற்ற விதத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருப்பதனால் நோயாளரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமல் உள்ளது.

2. யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகத்தின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக விபத்து, அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் ஒரு ஆபத்தான பணியாளரைப் பொறுப்பில் இருத்தி, அர்ப்பணிப்பான பணியாளரை இடம் மாற்றியுள்ளமை நோயாளிகளின் உயிராபத்துக்கேதுவான பாதகமான நிலைமை நிலையை உருவாக்கியுள்ளது.

3. சில ஊழியர்களின் பொறுப்புணர்ச்சி அற்ற நடவடிக்கைகள் தொடர்பாக வைத்திய நிபுணர்கள் சுட்டிக்காட்டியபோதும் அவர்களைத் திருத்துவதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

4. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் மருத்துவ நிபுணர்களால் தகவல்கள் கோரப்படும்போது தவறான தகவல்களை வழங்குவதுடன் தகவல்களை வழங்குவதில் தாமதம் செலுத்துதல்.

5. வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் உள்ள அனைத்து நோயாளிகளினதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வரை தொழிற்சங்க நடவடிக்கையாக, அதிதீவிர சிகிச்சை தவிர்ந்த சாதாரண பணிகளையும் இடைநிறுத்த முடிவு செய்துள்ளோம்.

இது நோயாளரின் நலன் கருதி எடுக்கப்பட்டுள்ள முடிவு என்பதனால் நீண்டகால நோக்கிலான சரியான முடிவுகள் எட்டப்படும் வரை தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர வாய்ப்புள்ளது. இதனால் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய சிகிச்சைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்பதனை மன வருத்தத்துடன் நாம் தெரிவித்துக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.

# மின் கம்பி இணைப்பு வேலையில் ஈடுபட்ட குடும்பஸ்தர் தவறி கீழே வீழ்ந்து மரணம்!

## யாழ்ப்பாணத்தில் துயரம்

யாழ்ப்பாணத்தில் மின் கம்பி இணைப்பில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவர் தவறி கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

வண்ணார்பண்ணை - பத்திரகாளி கோயில் பகுதியைச் சேர்ந்த தனபாலசிங்கம் நிருஜன் (வயது 42) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

யாழ்ப்பாணம் - பூநாரிமடம் பகுதியில் கடை வேலை ஒன்று நடைபெற்று வந்தது. அங்கு முதலாவது மாடியில் மேற்படி நபர் மின் கம்பி இணைப்பு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை தவறுதலாக கீழே வீழ்ந்துள்ளார்.

இதன்போது அவருடன் வேலை செய்தவர்கள் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

### செவ்வந்தியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்பான தகவல்கள் தெரிந்திருந்தும் அவற்றை மறைத்த தன் ஊடாகக் கொலைக்கு ஒத்தாசை புரிந்த குற்றச்சாட்டில் மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டு, கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அதன்போது, அவர்களைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்குக் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்தநிலையில், சந்தேகநபர்கள் இருவரும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் நேற்று புதன்கிழமை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

### ரி - 56 ரக துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிடிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் ரி - 56 ரக துப்பாக்கி, ஒரு மகசின் மற்றும் 22 தோட்டாக்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்துள்ளன.

அவற்றை மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றப் பிரிவினர் நேற்று புதன்கிழமை கண்டுபிடித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாண வடக்கு பொலிஸ் குற்றப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் எப்போது?

பெரும்பாலும் வாரம் தோறும் அல்லது பத்து நாள்களுக்கு ஒரு தடவை கூடுகின்ற தேர்தல் ஆணையம் அதன் வழமையான கூட்டத்தை இன்று நடத்துகின்றது.

உள்ளூராட்சித் தேர்தல்களைப் புதிதாக வேட்பு மனுக்களைக் கோரி நடத்துவதற்கான சட்ட அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு வந்த பின்னர் இன்றைய கூட்டம் நடைபெறுகின்ற காரணத்தினால், இந்தத் தேர்தலுக்கான திகதி நிர்ணயம் இன்று மேற்கொள்ளப்படலாம் என்ற எதிர்பார்ப்பு வந்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியாகி 14 நாள்களின் பின்னர், 17 ஆவது நாள் மதியம் வரை மூன்றரை நாள்கள் வேட்பு மனுத் தாக்கலுக்கு வழங்கப்படுகின்றது.

அதன் பின்னர் 5 முதல் 7 வார காலம் பிரசாரத்துக்காக வழங்கப்பட வேண்டும். பிரசாரத்தின் முடிவில் தேர்தலை நடத்தலாம்.

வழமையாக ஆறு வாரங்களுக்குக் குறையாத பிரசார காலம் இந்தத் தேர்தலுக்கு வழங்கப்படுகின்றது.

இவற்றைக் கூட்டிப் பார்த்தால் பொதுவாக தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து சரியாக 60 நாள்களின் பின்னர்தான் தேர்தலை நடத்த முடியும்.

தேர்தல் அறிவிப்பு மற்றும் தேர்தல் தினங்கள் குறித்து இன்று தேர்தல் ஆணையம் முடிவெடுக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போது வரவு - செலவுத் திட்டம் மீதான நாடாளுமன்ற விவாதம் ஒவ்வொருநாளும் நடைபெற்றுவருவதால், மார்ச் 21 ஆம் திகதி அது முடிவடைந்த பின்னர் தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்துகின்றன. ஆனால் இத்தேர்தலைக் காலம் கடத்தாமல் விரைந்து நடத்த ஆளும் தரப்புக் கோருகின்றது.

ஆயினும், எதிர்வரும் மே 12 ஆம் திகதி வெசாக் தினமாகும். வெசாக் தினத்தை ஒட்டி நாட்டின் பல பகுதிகளிலும் வெசாக் பந்தல்கள், சோடனைகள், நிகழ்வுகள் இருக்கின்றமையால், அவற்றுக்கு இடையே தேர்தல் பிரச்சாரத்திற்கு இடம் அளிக்காமல், வெசாக் காலத்திற்கு முன்னரே தேர்தலை நடத்தி முடிப்பதற்குத் தேர்தல் ஆணையம் சிந்திப்பதாகத் தெரிகிறது.

அப்படி மே பத்தாம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்தி முடிப்பதாயின், மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டி இருக்கும்.

அப்படிச் செய்தால் வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி கட்ட விவாதங்களில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஈடுபாடு காட்டுவது சிக்கலாகும். அவர்கள் நாடு முழுவதிலும் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு தத்தமது தரப்பு வேட்பாளர்களை இறுதி செய்யும் ஏற்பாடுகளில் ஈடுபடுவதற்காகத் தத்தமது பிரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய இக்கட்டு நேரும்.

புதிய உள்ளூராட்சி சபைகள் கூடுவதற்கான திகதி ஜூன் 2 என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், தேர்தலை அதுவரை தள்ளி வைக்கும் எண்ணத்தில் தேர்தல் ஆணையம் இல்லை என்றும், வெசாக் நிகழ்வுகளுக்கு ஐந்து, ஆறு நாள்களுக்கு முன்னரே தேர்தலை நடத்தி முடிப்பதில் தேர்தல் ஆணையம் கவனமாக இருக்கின்றது என்றும் விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

பெரும்பாலும் இன்று நடைபெறும் தேர்தல் ஆணையத்தின் கூட்டத்தின் பின்னர் இது பற்றிய நிலைமை தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.

# ரமழான் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு நாளை



ஹிஜ்ரி 1446 புனித ரமழான் மாத தலைப்பிறையைத் தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நாளை வெள்ளிக்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாட்டின் எப்பிரதேசத்திலாவது ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 0112432110, 0112451245, 0777316415 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் முஸ்லிம் மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.






# மட்டு.வாகரையில் வனவள அதிகாரிகள் அட்டகாசம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட புச்சாக்கேணி கிராமசேவகர் பிரிவில் உள்ள நான்காம் கட்டை பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுவருவோரின் குடிசைகளை வனவனத் திணைக்கள அதிகாரிகள் எரித்து அடாவடித்தனங்களை முன்னெடுத்துள்ளனர் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புச்சாங்கேணி கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட நான்காம் கட்டை, மூன்றாம் கட்டை, வெருகல் கல்லரிப்பு ஆகிய பகுதிகளிலேயே வனவளத் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் இந்த அடாவடித்தனத்தை முன்னெடுத்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் உள்ள சுமார் 13கொட்டில்கள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. பயிர்ச் செய்கைக்காக வைக்கப்பட்டிருந்த கச்சான்,சோளன் விதைகளையும் வனவளத் திணைக்கள அதிகாரிகள் எடுத்துச் சென்றுள்ளனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பரம்பரை பரம்பரையாக இப்பகுதியில் சேனைப் பயிர்ச்செய்கையை இந்த மக்கள் முன்னெடுத்து வந்துள்ளமையுடன், யுத்தக் காலத்தின் பின்னர் மீண்டும் பயிர்ச்செய்கையை சுமார் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் முன்னெடுத்துவந்த நிலையில், இப்பகுதியில் வனவளத் திணைக்கள அதிகாரிகள் தொடர்ச்சியான தொந்தரவுகளை விடுத்துவந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமைபிற்பகல்அப்பகுதிக்குள்நுழைந்த வனவளத்திணைக்கள உத்தியோகத்தர்கள் அங்கிருந்தவர்களை வெளியேற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்தமையுடன், மக்கள் சொந்தத் தேவைக்கு வெளியே போயிருந்த பகுதியில் உள்ள குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் வாகரை பிரதேச செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட காணி உரிமைக்கான வலையமைப்பு ஆகியவற்றின் கவனத்திற்கு பாதிக்கப்பட்ட மக்களினால் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் கவனத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட காணி உரிமைக்கான வலையமைப்பினால் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா முரளிதரனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, இது தொடர்பிலான தகவல்கள் தனக்கும் கிடைத்துள்ளன எனவும் வாகரை பிரதேச செயலாளருடன் தொடர்புகொண்டு இது தொடர்பான முழுமையான அறிக்கையைக் கோரியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அந்த பகுதிகள் பிரதேச செயலகத்திற்கு சொந்தமான காணிகளைக்கொண்ட பகுதியாகவுள்ளது என்பதை பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார் எனவும், இது தொடர்பில் அப்பகுதிக்கு அவர் நேரடி விஜயம் செய்து உறுதிப்படுத்தியதன் பின்னர் அங்கு இடம்பெற்ற சம்பவத்திற்கு எதிரான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் நாட்டில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அரச அதிகாரிகளினாலையே உயிர் அச்சுறுத்தல் உருவாகும் நிலை காணப்படுகிறது என மட்டக்களப்பு மாவட்ட காணி உரிமைக்கான வலையமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்த வலயமைப்பு விடுத்துள்ள கண்டன அறிக்கையில் –

25.02.2025 அன்று 2.00 பிற்பகல் மணியளவில் மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட புச்சாக்கேணி கிராமசேவகர் பிரிவில் உள்ள நான்காம் கட்டை பகுதிக்குச் சென்ற வனவளத் திணைக்களத்தினர் நீண்ட காலமாக குடியிருந்து வரும் மக்களை அச்சுறுத்தி, அங்கிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என மிரட்டியுள்ளனர். மூன்று பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்வதற்காக தகவல்களைச் சேகரித்து சென்றுள்ளனர். அது மட்டுமல்லாது, குடியிருப்புக்களையும் எரியூட்டியுள்ளனர்.

இச் செயற்பாட்டினை மிக வன்மையாக கண்டிக்கின்றோம்.

இது தொடர்பாக கேள்வியுற்று கதிரவெளியில் இருந்து சென்ற இரு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் நியாயம் கேட்டபோது அவர்களும் மிக மோசமாக தாக்கப்பட்டமையுடன், கைவிலங்கு போடப்பட்டு குற்றவாளிகளை அழைத்துச் செல்வதுபோன்று மிகவும் கடுமையாக நடந்து கொண்டுள்ளனர். அதன் பின்னர் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மனித உரிமைகள் இணைப்பாளர் இசைதீனிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. அத்துடன் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சிறிநாத் மற்றும் ஞா.சிறிநேசன் ஆகியோருக்கும் மேற்படி விடயம் தொடர்பில் முறையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் பகுதிகளில் வேறு மாவட்டங்களை சேர்ந்த பெரும்பான்மையினத்தவர்களினால் காடுகள் அழிக்கப்பட்டு, காணிகள் அபகரிக்கப்படும்போது அவர்களுக்கு உதவும் வனவளத் திணைக்களத்தினர், நமது மக்கள் தமது சொந்த மண்ணில் பயிர்ச்செய்கைகள் முன்னெடுக்கும் போது அவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுப்பதையும், அச்சுறுத்துவதையும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

இது தொடர்பில் அரசாங்கம் வனவளத்திணைக்களம் மீது முறையான நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களை அணிதிரட்டி போராடவேண்டிய நிலை யேற்படும். – எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி

நாட்டின் பல பகுதிகளில் இன்று 75 மில்லிமீற்றருக்கும் அதிகரித்த மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு,வடமத்திய,கிழக்கு ,ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா,ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா பொலன்னறுவை, காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு,வடமத்திய,கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மாத்தளை, நுவரெலியா மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோமீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# நிந்தவூர்க் கடற்கரைப் பகுதியில் ஒதுங்கிய பாரிய தண்ணீர் தாங்கி

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை பகுதியில் பாரிய தண்ணீர் தாங்கி ஒன்று நேற்று மாலை கரை ஒதுங்கியுள்ளது.

கடலில் நிலவும் கடும் காற்றால் இது கரையொதுங்கி இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்து கடற்படையினருக்குத் தெரியபடுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாரிய தண்ணீர் தாங்கி இரும்பு உலோகத்தில் செய்யப்பட்டு அதன்மேல் பைரினால் வார்க்கப்பட்டு இளம் பச்சைக் வர்ண கூம்பக வடிவில் அடைக்கப்பட்டதாகஜ் காணப்படுகின்றது.

இப்பொருளின் மேற்பகுதியில் டயர்கள் காணப்படுகின்றன. இது பெரிய கப்பல்களின் ஒரு பாகமாக இருக்கலாம் என அப்பகுதி சில மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த சில வாரங்களாக கிழக்கு மாகாண கடற்கரை பகுதிகளில் மர்மான பொருள்கள் மற்றும் ஆளில்லாத படகுகள், டொல்பீன்கள் போன்றவை கரை ஒதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# இறுதி ஊர்வலத்தில் சென்றவர்கள் மீது மோதி விட்டுத் தப்பிய வாகனம் சிக்கியது







யாழ்ப்பாணம், கோப்பாய் பகுதியில் இறுதி ஊர்வலத்தில் சென்றவர்கள் மீது மோதி தள்ளி விட்டுத் தப்பிச் சென்ற வாகனத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய கைதடி பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைத்திருந்த நிலையில் வாகனம் நேற்றுப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கோப்பாய் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்த ஒருவரின் பூதவுடலுக்கு இறுதி கிரியைகள் நடைபெற்று தகன கிரியைக்காக கோப்பாய் – கைதடி வீதியில் உள்ள இந்து மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது. ஊர்வலமாக சென்றவர்கள் மீது வீதியால் மிக வேகமாக வந்த வாகனம் மோதி தள்ளி விட்டு, அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்றது.

விபத்தில் காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் ஒருவர் உயிரிழந்துள்ளமையுடன் ஏனைய ஐந்து பேர் சிகிச்சை பெற்றனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் வாகனம் கைப்பற்றப்பட்டது. வாகனத்தின் சாரதி மற்றும் உரிமையாளரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# திருக்கேதீஸ்வரத்தில் பக்தர்கள் கூட்டத்துக்கு மத்தியில் சிறப்பாக இடம்பெற்ற மகா சிவராத்திரி பூஜை, வழிபாடு

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

வரலாற்றுப் புகழ் பெற்றதும் நாயன் மார்களின் பாடல் பெற்ற தலங்களில் ஒன்றுமாகிய மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் 2025 ஆம் ஆண்டுக் கான மகா சிவராத்திரி நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை இரவு முதல் பக்திபூர்வ மாக இடம்பெற்றது.

உலகம் முழுவதும் இருந்து பல லட்சம் பக்தர்கள் கலந்து கொண்டு தங்கள் நேர்த்தி கடன்களை செலுத்தி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இலங்கை மாத்திரம் இன்றி உலகம் முழுவதும் இருந்து வருகை தந்த சிவ பக்தர்கள் மன்னார் பாலாவியில் நீராடி, பாலாவி தீர்த்த நீரை திருக்கேதீஸ் வர ஆலயத்தில் உள்ள மகா சிவ லிங்கத்திற்கு நீர் வார்த்து, நெய் விளக்கு ஏற்றி, வேண்டுதல்கள் மற்றும் நேர்த்திக் கடனை நேற்றுஅதிகாலை தொடக்கம் செலுத்தினர்.

மேலும் மகா சிவராத்திரி நிகழ்வை ஒட்டி விசேட போக்குவரத்துச் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன. குடிதண்ணீர், சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளும் உரிய முறையில் வழங்கப் பட்டன.

திருக்கேதீஸ்வர திருப்பணி சபையின் ஏற்பாட்டில் பல்வேறுபட்ட இந்து கலாசார நிகழ்வுகள், அறநெறி சொற்பொழிவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இரவு விசேட பஜனைகள் மற்றும் கூட்டு வணக்க நிகழ்வுகளும் இடம் பெற்றன.

அதே நேரம் இம்முறை சிவராத் திரி நிகழ்வுக்கு என விசேட பொலிஸ், இராணுவ, அதிரடிஒ படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

இலங்கை மற்றும் ஏனைய நாடு களில் இருந்து சுமார் எட்டு இலட்சத் துக்கும் அதிகமான பக்தர்கள் சிவ ராத்திரி நிகழ்வில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.












# ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தின் காயத்ரீ பீடத்தில் மகா சிவராத்திரி

**(பொகவந்தலாவ நிருபர் எஷ்.சதீஷ்)**

நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ் வரர் ஆலயத்தின் காயத்ரீ பீடத்தில் மகா சிவராத்திரி நேற்றுப் புதன்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற்றது.

ஸ்ரீஇலங்காதீஸ்வர பெருமானுக்கு நான்கு சாமங்களிலும் விசேட அபிஷேக அலங்கார பூஜைகள் இடம் பெற்றன. குரு பூஜை, சிவ திருவுருவச்சிலை, பாணலிங்கங்கள் மற்றும் குரு திரு வுருவச்சிலை ஊர்வலம், காயத்ரீ பூஜை, மகாமிருத்யுஞ்ஜெய ஓமம், பிரார்த் தனை, தியானம், மந்திர பாராயணம் மற்றும் அருளுபதேசம் என்பனவும் இடம்பெற்றன.

இந்த மகா சிவராத்திரி விழா பூஜையில் அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமையோடு கலை நிகழ்வு களும் இடம்பெற்றன.























# தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும் பக்திபூர்வமாக சிவராத்திரி வழிபாடு

(க.சரவணன்)

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாய் திகமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேரோடும் ஆலயமென பெயர் பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விரத பூஜை வழிபாடுகள் நேற்றிரவு புதன்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றன.

உலகநாச்சி அம்மையாரால் பூஜிக்கப்பட்ட ஆலயமான கொக்கட்டிச் சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலய சிவராத்திரி விரத பூஜை வழிபாடுகளில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நான்கு சாம பூசைகளில் பங்குபற்றினர் என பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்கள் தெரிவித்தார்.

பூசை வழிபாடுகளில் கலந்து கொண்ட பக்த அடியார்கள் நெய் விளக்கேற்றியும், கற்பூரச் சட்டி ஏந்தியும், வில்வ இலைகளால் சிவலிங்கப் பெருமானை பூஜித்தும் தங்களது நேர்த்திகளை நிறைவேற்றினர். கண் விழித்து சிவபுராணம் ஓதி, ஓம் நமசிவாய எனும் மந்திரத்தை உச்சரித்து, பக்திபூர்வமாக மகா சிவராத்திரி விரதத்தை அனுட்டித்தனர்.









# வெடுக்குநாறி மலையில் மாலை 5 மணியுடன் மட்டுப்படுத்தப்பட்ட சிவராத்திரி வழிபாடுகள்





(பா.சதீசன்)

வெடுக்குநாறி மலையில் 5 மணியுடன் மட்டுப்படுத்தப்பட்டது சிவராத்திரி வழிபாடுகள். இதனை சிவன்பகல் என்றே கூற வேண்டும். இங்கே அடக்கு முறைகள் பிரயோகிக்கப்படுகின்றன என சமூக செயற்பாட்டாளர் எஸ்.தவபாலன் தெரிவித்தார்.

தமிழர்களுடைய வரலாற்று இடமாகவும், வழிபாட்டு இடமாகவும் இருக்கின்ற வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரிக்கான வழிபாடுகள் நேற்று இடம்பெற்றிருந்தன. வழிபாட்டின் பின்னர் கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்துக்களுடைய முக்கிய விரதமாக திகழ்வது சிவராத்திரி. இரவு பொழுதிலே சிவனை நினைத்து விரதம் இருப்பது வழமை. ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் வரலாற்று தொன்மைமிகு ஆலயம். இந்த ஆலயத்தின் வழிபாட்டு உரிமைக்காக போராடிவரும் இந்நிலையில் தொடர்ச்சியாக நெருக்கடிகளுக்கு அப்பால் போராடி வருகின்றோம். கடந்த வருடம் இவ்விடத்தில் சிவராத்திரி வழிபாடு இடம்பெறும் போது பொலிஸார் மிகவும் மோசமான முறையில் வழிபாடுகளை நடாத்த விடாமல், திட்டமிட்டு பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி 13 நாள்கள் 8 நபர்களை சிறையில் அடைத்தனர்.

இம்முறை துரதிர்ஷ்டவசமாக மாலை 5 மணியுடன் மட்டுப்படுத்தப்பட்ட சிவராத்திரியாக இதனை ஒரு சிவன்பகல் என்றே கூற வேண்டும். இவ்விடத்தில் அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

என்னதான் நெருக்கடிகள் இருந்தாலும் எங்களுடைய தொன்மைகளையும், வழிபாட்டு உரிமைகளையும் யாரும் தீர்மானிக்க முடியாது. அது பொலிஸாராக இருக்கலாம், வேறு திணைக்களங்களாக இருக்கலாம். வழிபாட்டு உரிமைகளை தீர்மானிக்கின்ற உரிமை மக்களிடமே இருக்கின்றது.

அந்த வகையில் எம்மவர்களே வழிபாட்டு உரிமைகளை மட்டுப்படுத்துகின்ற செயற்பாடுகளில் இறங்கியுள்ளமை வேதனையை தருகின்றது. 5 மணியுடன் பூஜை வழிபாடுகளை நிறுத்தியமை கவலை தருகின்றது.

நாங்கள் போராடுவது வெறுமனே பொலிஸ், அரச திணைக்களங்களுக்கு எதிராக மட்டுமல்ல, இந்த மலையை மீட்பதற்காக மலையை நயவஞ்சகமாக தாரை வார்க்கின்ற செயற்பாடுகளை செய்பவர்களுக்கு எதிராகவும் போராட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது.

வெறுமனே சிவராத்திரி என்பதனையும் தாண்டி இந்த ஆலயத்திற்கு மக்கள் வரவேண்டும். இந்த ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும், பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதனால்தான் இவ் ஆலயத்தை நாங்கள் பாதுகாக்க முடியும். - என மேலும் தெரிவித்தார்.

# சைவ கொடித் தினம் அனுஷ்டிப்பு



உலக சைவப் பேரவை இலங்கைக் கிளை ஏற்பாட்டில் விடைக்கொடி செல்வர் எஸ். தனபாலா

தலைமையில் சைவ கொடி தினம் சிவராத்திரியானவ்நேற்றய் அனுஷ்டிக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற பூஜையை அடுத்து ஆலய கோபுர வாசலில் நடைபெற்ற நிகழ்வில் வெள்ளவத்தை இராம கிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மனாந்தஜீ மகராஜ், ஆஸ்திரேலியா டாவின் பிள்ளையார் ஆலய உறுப்பினர் டாக்டர் ரி. மகேந்திரன், செயலாளர் செல்வநிதி கனகரட்டினம், பொருளாளர் ஆர். வைத்திமாநிதி மற்றும் ஆலய அறங்காவலர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டு கொடி அணிவித்தனர்.




# மகா சிவராத்திரி வழிபாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

உலகம் முழுவதும் வாழும் இந்து பக்தர்களால் சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்து கொண்டாடப்படும் மகா சிவராத்திரியை முன்னிட்டு, கொழும்பு 06 இல் அமைந்துள்ள மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு நேற்றிரவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் பங்கேற்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான சஜித் பிரேம தாஸவுக்கும் அழைப்பு விடுக்கப்பட் டிருந்தது.

இந்த அழைப்பை ஏற்று நிகழ்வில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சிவபெருமானுக்காக நடைபெற்ற இந்து சமய வழிபாடுகளில் கலந்து கொண்டு ஆசி பெற்றார்.












# த.வெ.க. பண்ணையார்களுக்கான கட்சி இல்லை; 2ஆம் ஆண்டு தொடக்க விழாவில் விஜய் உரை





"த.வெ.க. பண்ணையார்களுக்கான கட்சி இல்லை. அந்த காலத்தில் பண்ணையார்கள் தான் பதவியில் இருப்பார்கள். ஆனால் இப்போது பதவியில் இருப்பவர்கள் பண்ணையார்களாக மாறிவிடுகிறார்கள்."

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

மாமல்லபுரத்தில் நடைபெறும் த.வெ.க. இரண்டாம் ஆண்டு தொடக்க விழாவில் அக்கட்சியின் தலைவர் விஜய் மேலும் உரையாற்றுகையில்,

"1967, 1977 தேர்தல்களை போல ஒரு மிகப்பெரிய மாற்றத்தை நாங்கள் 2026 தேர்தலில் உருவாக்குவோம். இந்த அரசியலை பொறுத்தவரை யார், யாரை எதிர்ப்பார்கள் என்று கணிக்கவே முடியாது. இங்கு நிரந்தர நண்பனும் இல்லை. எதிரியும் இல்லை. அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். அது ஜனநாயக உரிமை என்று சொல்வார்கள்.

ஆனால் மக்களுக்கு ரொம்ப ரொம்ப பிடித்துப் போன ஒருவன் அரசியலுக்கு வருகிறான் என்றால், அதை நல்லவர்கள் எல்லாம் வரவேற்பார்கள். ஒரு சிலருக்கு மட்டும் கொஞ்சம் எரிச்சல் வரத்தானே செய்யும். இதுவரை நாம் சொன்ன பொய்யை நம்பி மக்கள் நமக்கு ஓட்டு போட்டார்களே, ஆனால் இவன் சொல்வது மக்கள் மனதுக்கு நெருக்கமாக உள்ளதே, இவனை எப்படி க்ளோஸ் செய்யலாம் என்று நினைக்கின்றனர்.

அதில் என்ன பேசுவதென்று தெரியாமல், வர்றவன் போறவன் எல்லாம் கட்சி ஆரம்பிக்கிறான் என்று சொல்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்கள் நமக்கு எதிராக பேசுவதைப் போல. இப்படிப்பட்ட ஒரு அரசியல் களத்தில் கொஞ்சம் கூட பயம் இல்லாமல், வரும் எதிர்ப்புகளை இடது கையால் தள்ளிவிட்டு நம்முடைய தவெக இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.

நம்முடைய மாவட்ட நிர்வாகிகள் எல்லாருமே இளைஞர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கின்றனர். அண்ணா, எம்.ஜி.ஆர் கட்சி தொடங்கிய போது அதில் இருந்தவர்கள் இளைஞர்கள்தான். அதுதான் வரலாறு. கட்சி நிர்வாகிகள் எல்லாருமே சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர்கள் என்று சொல்கிறார்கள். சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர்கள்தான் பெரிதாக சாதித்திருக்கிறார்கள். நம் கட்சி பண்ணையார்களுக்கான கட்சி இல்லை. அந்த காலத்தில் பண்ணையார்கள் தான் பதவியில் இருப்பார்கள். ஆனால் இப்போது பதவியில் இருப்பவர்கள் பண்ணையார்களாக மாறிவிடுகிறார்கள்.

மக்களின் நலனை பற்றியோ, நாட்டின் நலனை பற்றியோ கவலையில்லாமல் வெறும் பணம் பணம் மட்டும் தான். இப்படிப்பட்ட எண்ணம் கொண்ட பண்ணையார்களை அரசியலை விட்டு அகற்றுவதுதான் நம்முடைய முதல் வேலை." என்றார்.

# வாரணாசியில் நாகா துறவிகளின் ஊர்வலம் காசி விஸ்வநாதர் கோயிலில் சிறப்பு பூஜை



உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் நாகா துறவிகள் ஊர்வலம் நடத்தியுள்ளனர். மகா சிவராத்திரியை முன்னிட்டு காசி விஸ்வநாதர் கோயிலில் சிறப்பு பூஜை நடத்தினர்.

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் 144 வருடங்களுக்கு பின் மகா கும்பமேளா நடைபெறுகிறது. இந்த விழா இங்குள்ள திரிவேணி சங்கமத்தின் கரைகளில் ஜனவரி 13 ஆம் திகதி முதல் துவங்கியது. இதில் பவுசு பூர்ணிமா, மகர சங்கராந்தி, மவுனி அமாவசை, வசந்த் பஞ்சமி, மக் பூர்ணிமா, மகாசிவராத்திரி என மொத்தம் ஆறு வகையான ராஜகுளியல் நிகழ்ச்சி இடம்பெற்றது. இவற்றில் ஐந்தாவது புனிதக்குளியலான வசந்த் பஞ்சமி பெப்ரவரி 3 இல் முடிந்தது. இதையடுத்து மகாகும்பமேளாவில் முகாமிட்டிருந்த 13 அகாடாக்களைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் வராணாசிக்கு இடம்பெயர்ந்தனர்.

இந்த இடப்பெயர்வு, மகா கும்பமேளாவில் மட்டுமே நடைபெறும். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் மகா கும்பமேளாவில் நடத்தியது போல், புதன்கிழமை காலை வாராணாசியில் மாபெரும் ஊர்வலம் நடத்தினர்.

ஜூனா அகாடா தலைமையில் மகா சிவராத்திரிக்காக, நாகா சாதுவினர் நடத்திய இந்த ஊர்வலம் பொதுமக்களை மிகவும் கவர்ந்தது. அதிகாலை 4 மணிக்கு அனைவரும் கங்கையில் புனிதக் குளியல் நடத்தினர்.

அதன்பிறகு துவங்கிய ஊர்வலத்தில், உடல் முழுவதிலும் சாம்பலைப் பூசி, நாகா சாதுக்கள் நிர்வாணமாக, தம் ஆயுதங்களை ஏந்தியபடி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.



# சூடானில் இராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் 46 பேர் பலி

சூடானின் தலைநகர் கார்ட்டூமினின் புறநகர்ப் பகுதியில் இராணுவ விமானமொன்று விபத்துக்குள்ளானதில் 46 பேர் உயிரிழந்தனர்.

அந்த விபத்தில் காயமடைந்த 10 பேர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்படுகிறது.

கார்ட்டூமின் புறநகரான வடக்கு ஓம்டுர்மானில் உள்ள இராணுவ விமான தளத்திலிருந்து புறப்பட்ட நிலையில் இந்த விமானம் விபத்துக்குள்ளானது.

இதனிடையே, உயிரிழந்தவர்களில் கார்ட்டூமின் சிரேஷ்ட இராணுவ தளபதியான மேஜர் ஜெனரல் பஹர் அஹமட்டும் உள்ளடங்குகிறார் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்திக்கிறார் உக்ரைன் ஜனாதிபதி

உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலஸ்கியின் அமெரிக்க விஜயத்தின் போது, கனிம வளங்கள் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என நம்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் – ரஷ்யாவுக்கு இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்று வரும் போரை முடிவுக்கு கொண்டு வருவதில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது.

ரஷ்யாவுடனான போரின்போது உக்ரைனுக்கு அளித்த உதவிகளுக்கு பதிலாக அந்த நாட்டின் அரியவகை கனிமங்களை வெட்டி எடுக்கும் உரிமத்தை தங்களுக்கு கால வரையில்லாமல் அளிக்கவேண்டும் என டொனால்ட் ட்ரம்ப வலியுறுத்தி வருகிறார்.



இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக உக்ரைன் ஜனாதிபதி நாளை அமெரிக்காவுக்கு பயணமாகவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கனிம ஒப்பந்த விதிமுறைகளை உக்ரைன் ஏற்றுக்கொண்டதாகவும், அதில் கையெழுத்திடத் தயாராக இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், பாதுகாப்பு உத்தரவாதங்கள் இல்லாமல் உக்ரைன் கனிம ஒப்பந்தத்தில் கையெழுத்திடாது என அந்த நாட்டு பிரதமர் டெனிஸ் ஷ்மிஹால் தெரிவித்துள்ளார்.

# சிலியில் மின் தடை: இருளில் சிக்கித் தவிக்கும் மக்கள்!

சிலியில் ஏற்பட்டுள்ள மின் தடைக் காரணமாக மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பலரின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது மின்தடை காரணமாக விமானச் சேவைகளும் இரத்தாகியுள்ளன.

மின் தடைக்கான காரணத்தைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு விடயத்துடன் பொறுப்பான அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் - 27.02.2025




இன்று உங்கள் செயல்களில் தாம தங்கள் காணப்படும். உங்கள் அணுகு முறையிலும் திட்டங்களிலும் பொறுமை தேவை. இறை வழிபாட்டின் மூலம் மன அமைதி பெறலாம்.

உங்கள பணிகளை திறமையாக மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

பொறுமையுடன் இருந்து உங்கள் துணையின் அன்பைப் பெறுங்கள். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வும் அது உறவை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும். சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

ஒவ்வாமை பாதிப்பு ஏற்படலாம். தியானம் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று உங்கள் பதற்றம் மற்றும் பாது காப்பின்மை உணர்வை கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். நம்பிக்கையுடன் இருங்கள். கண்டிப்பாக நல்லதே நடக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பணியாற்ற வேண்டும். இதன் மூலம் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்ற இயலும்.

சில பிரச்சினைகளில் உங்கள் துணையை சமாளிப் பதை கடினமாக உணர்வீர்கள். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வீர்கள். இன்று அதிரஷ் டம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் கடின உழைப்புக்குக் கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கப் பெறலாம்.

உங்கள் நேர்மையான அனுகுமுறை மற்றும் நல்ல புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் நல்ல பிணைப்பை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அதனால் சுதந்திரமான நிதி நிலை காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் பராமரிப்பீர்கள். உங்க ளிடம் இன்று ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்று அதிர்ஷ்டகரமான நாள். உங்கள் செயல்களில் வெற்றி கிடைக் கும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல் திறனில் வெற்றி பெறுவீர்கள். பதவி உயர்வுக் கான வாய்ப்பு உள்ளது. உங்கள் திறமைக்கு அங்கீ காரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று கடின உழைப்பு வெற்றியை பெற்றுத் தரும். ஊக்கத்தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை பெற்றுத் தரும்.

இன்று உங்களிடம் உறுதியான மனநிலை காணப்படும்.




இன்று உங்களுக்கு விருப்பமான பலன்கள் கிடைக்காது. முக்கிய முடிவுகள் எடுப்பதை இன்று தவிர்க்க வேண்டும். நல்ல பலன் காண நம்பிக்கையுடன் இருங்கள்.

நீங்கள் கடினமாக உழைத்த போதி லும் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணியிடச் சூழல் கடினமானதாக இருக்கும்.

உங்களின் மாறுபடும் மனநிலை காரணமாக எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். அந்த உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். மகிழ்ச்சியாக இருக்க உணர்சிவசப்படுதலைத் தவிர்க்க வேண்டும்.

இன்று கணிசமான தொகை சம்பாதிப்பதற்கு குறைந்த வாய்ப்பே உள்ளது. இன்று உங்கள் பணத் தேவை களை பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு அதிர்ஷ்டம் காணப்படாது.




இன்று அனுகூலமான நாளாக இருக்காது. நற்பலன்கள் தாமதமாக கிடைக்கும். இன்று அதிகம் எதிர்பார்க்க வேண்டாம். பிரார்த்தனையில் ஈடுபடு வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் பதற்றம் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இத்த கைய மனநிலையை தவிர்ப்பது நல்லது. அமைதியை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் விலை மதிப்பு மிக்க பொருள்களைப் பத்திர மாகப் பார்த்துக் கொள்ளவும். அவற்றை இழக்க வாய்ப்பு உள்ளது. மேலும் பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப் புள்ளது.




இன்று அனுகூலமான நாளாக இருக் கக் காண்பீர்கள். உங்கள் விருப்பங் கள் நிறைவேறும். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டாரம் விரிவடையும்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்திறன் கண்டு சகபணி யாளர்கள் பொறாமைப்படுவார்கள். உங்கள் செயல் திறனை மேம்படுத்த புதிய யுக்திகளை கையாள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்கள் துணையிடம் சமநிலையோடு பழகுவீர்கள். உங்கள் பிரியமானவரும் உங்களுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வார்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும் உங்கள் சேமிப்பு அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இதனால் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிக்க இயலும்.




இன்று அனுகூலமான பலன்கள் கிடைக்காது. இன்று நற்பலன்கள் காண சமநிலையான அணுகு முறையோடு சூழ்நிலையைக் கையாள வேண்டும்.

பணியில் கவனச் சிதறல் ஏற்படாத வகையில் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் பணிகளைத் திறம்பட ஆற்ற பிறரின் ஆலோசனை கேட்டு நடந்து கொள்ளுங்கள்.

உங்கள் மனதில் காணப்படும் தேவையற்ற பதற்றம் காரணமாக அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையிடம் தவறு கண்டுபிடிப்பீர்கள்.

இன்று மிதமான பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும் வாய்ப்பு குறைவு.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் உணவு வகைகளை தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 27.02.2025




இன்று உங்களுக்கு அதிக பொறுமை தேவை. நல்ல வாய்ப்புகள் தவறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உறுதியான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக் காது. பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவ லையை அளிக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. மகிழ்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள நீங்கள் இருவரும் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பயணத் தின் போது இழப்பு ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும். எனவே எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.




உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். வெற்றி காண்பதற்குத் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். பதற் றப்படாமல் செயல்களை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை ஆற்றும் போது தவறுகள் ஏற்படலாம். எனவே திட்டமிட்டு பணியாற்றுவது சிறந்தது.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்ள முயலுங்கள். இல்லையெனில் தேவையற்ற குழப்பம் சூழ்நிலையை பாதிக்கும்.

இன்று அதிக பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. இன்று செலவுகள் அதிகமாக இருக்கும்.

இன்று பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. என்றாலும் சிறிய அளவில் கண்கள் மற்றும் பற்களில் பிரச்சினை ஏற்படலாம்.




இன்று உங்கள் அனைத்து முயற்சி களிலும் வெற்றி கிடைக்கும். தன்னம் பிக்கையுடன் வாழ்வில் முன்னேறு வீர்கள். வெற்றி பெறுவதற்கான ஆற்றல் மற்றும் உறுதி உங்களிடம் காணப்படும்.

நீங்கள் பணியிடத்தில் துடிப்புடன் செயல்படுவீர்கள். உங்கள் திறமையின் மூலம் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்சிகரமான உறவை அனுபவிப்பீர்கள். இருவரிடையே உறவில் நல்ல பிணைப்புக் காணப்படும்.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். அதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று அதிக ஆற்றலுடன் காணப் படுவீர்கள். இன்றைய நாளை ஆக்க பூர்வமான நோக்கத்துக்குப் பயன் படுத்துவதன் மூலம் பலன்கள் சாதகமாக இருக்கும். இன்று சௌகரியங்கள் அதிகரித்துக் காணப்படும்.

நீங்கள் திறமையுடன் பணியாற்றி வெற்றி பெறு வீர்கள். உங்கள் தனித்திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தை களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மிகவும் மகிழ்விக்கும். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வீர்கள்.

சிறிய அளவிலான கடன் வாங்குவீர்கள். உங்கள் சேமிப்பு உயரும் வாய்ப்பு உள்ளது.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திடமான ஆரோக்கியம் காணப்படும்.

# 12 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருளுடன் பெண் கைது



குஷ் போதைப்பொருளுடன் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

38 வயதான குறித்த பெண் தாய் லாந்திலிருந்து ஹொங்கொங் ஊடாக நேற்று அதிகாலை நாட்டை வந்த டைந்துள்ளார்.

அவர் தமது பயணப்பைக்குள் ஒரு கிலோ 200 கிராம் போதைப் பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து கொண்டு வந்துள்ளார் என சுங்கம் தெரிவித்தது.

கைப்பற்றப்பட்ட குஷ் போதைப் பொருளின் பெறுமதி 12 மில்லியன் ரூபாவாகும். சந்தேகநபரான பெண் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# கற்பிட்டி கண்டல்குளியிலிருந்து 6 கழுதைகளைக் கடத்த முயற்சி

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி கண்டல்குளி பகுதியிருந்து கென்டர. வாகனத்தில் அனுமதி பத் திரம் இன்றி ஆறு கழுதைகளை ஏற்றிச் சென்ற இருவர் நேற்றுப் புதன்கிழமை நுரைச்சோலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டக்குளி பகுதியில் உள்ள கழு தைகளை கற்பிட்டி பிரதேச செயலா ரின் அனுமதி பத்திரமின்றி வேறு பகுதிக் குக் கொண்டு செல்வது சட்டவிரோத மானது எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணைகளின் போது, இந்த கழுதை கள் படல்கம பிரதேசத்தில் உள்ள தென்னந் தோட்டங்களுக்கு கொண்டு செல்ல முற்சிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் களிடம் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.